பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 சித்திரை 19 ஞாயிற்றுக்கிழமை 02.05.2021 கதிர் 46

## மேலும் சில பிரதேசங்கள் இன்று தொடக்கம் முடக்கம்

கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் காரணமாக இன்று காலை முதல் நாட்டில் மேலும் சில பிரதேசங்கள் முடக்கப்பட்டுள்ளன என்று இராணுவத் தபளதி ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித்துள்ளார்.

அதன்படி கொழும்பு மாவட்டத்தின் பிலியந்தலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்கள் முடக்கப்பட்டுள்ளன.

2

# தமிழகத்தில் மீண்டும் தி.மு.க. ஆட்சி: புதிய முதல்வராகின்றார் ஸ்டாலின்!



## பிரபலங்கள் வாழ்த்து; அ.தி.மு.க. தோல்வி

**தமிழகத்தில் கடந்த மாதம் நடைபெற்று முடிந்த சட்டமன்றத் தேர்தலின் வாக்கு எண்ணும் பணிகள் இன்று காலை ஆரம்பமாகி முடிவுகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இந்தநிலையில், மாலை 5 மணி வரையிலான முடிவுகளின்படி 156 தொகுதிகளைக் கைப்பற்றி தி.மு.க. கூட்டணி முன்னணி வகிக்கின்றது. அ.தி.மு.க. கூட்டணி 78 தொகுதிகளைக் கைப்பற்றும் நிலையில் உள்ளது.**

2

## தமிழகத்தின் புதிய ஆட்சியை நாம் வாழ்த்தி வரவேற்போம்!

### மனோ எம்.பி. அறிக்கை



தமிழகத்தின் ஆளும் கட்சியையும், தமிழக முதல் வரையும் வாழ்த்தி வரவேற்கத் தயாராகுவோம் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

2

## ஸ்டாலினுக்குச் சுமந்திரன் வாழ்த்துத் தெரிவிப்பு



தமிழக சட்ட சபைத் தேர்தலில் அமோக வெற்றியீட்டிய தி.மு.கவுக்கும் தலைவர் மு.க.ஸ்டாலினுக்கும் எமது மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி

2

Australian Skilled Visa

Engineers (Civil & Mechanical), Nurses, Engineering Diploma holders in HNDE, NDES, NDT, C & G

Australian Skilled – Recognised Graduate Visa

BSc.Engg from University of Moratuwa or Peradeniya or Jaffna or Ruhuna

HOTLINE: 0766228891

தொடர்புகளுக்கு:-

Australian Migration Consultants

41, George R De Silva Mw, Colombo 13

0112437285, Email: sl.austvisa@gmail.com

## அமைச்சர் மஹிந்தானந்த சுய தனிமைப்படுத்தலில்!



அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே கட்டாய சுயதனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

அமைச்சரின் சாரதி

2

## தனியார் பஸ்கள் நாளை முதல் 25 வீதம் மாத்திரமே சேவையில்



நாளை திங்கட்கிழமை முதல் நாடளாவிய ரீதியில் 25 வீத தனியார் பஸ்கள் மட்டுமே சேவையில் ஈடுபடவுள்ளன என்று தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

2

## ஒட்சிசனுக்கு இங்கு தட்டுப்பாடு ஏற்பட்டால் சிங்கப்பூரில் இருந்து இறக்குமதி செய்வோம்

### அமைச்சர் டலஸ் தெரிவிப்பு



இலங்கையில் ஒட்சிசன் தட்டுப்பாடு ஏற்படும் போது, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்வது குறித்து

2




## கொரோனாத் தொற்று ஆபத்தால் ஆட்பதிவுத் திணைக்களம் பூட்டு!

### விசேட தொடர்பு இலக்கம் அறிமுகம்

ஆட்பதிவுத் திணைக்களத்தின் தலைமை அலுவலகம் மற்றும் அனைத்து பிராந்திய அலுவலகங்களால் வழங்கப்படும் அனைத்து சேவைகளும் மீள அறிவிக்கும் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளது எனத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் வியானி குணதிலக தெரிவித்தார்.

கொரோனாத் தொற்றுப்

2

## தம்மிக்க தயாரித்த பாணி மருந்து கொரோனாவுக்குப் பயனேயற்றது

### மருத்துவ ஆய்வில் உறுதியானது!

கேகாலையைச் சேர்ந்த தம்மிக்க பெரேரா தயாரித்த கொரோனா பாணி தடுப்பு மருந்து கொரோனாவில் இருந்து எவ்வகையிலும் பாதுகாப்பளிக்கவில்லை என ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

அமைச்சரவையின் உத்தரவுப்படி ராஜரட்டை பல்கலைக்கழகத்தால் அனுராதபுர மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த 68 கொவிட் தொற்று நோயாளிகளுக்கு தம்மிக்க தயாரித்த கொரோனா பாணி வழங்கி பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

எனினும்

2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒட்சிசனுக்கு இங்கு தட்டுப்பாடு ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசு கவனம் செலுத்தியுள்ளது.

- இவ்வாறு அமைச்சர் டலஸ் அலகப்பெரும தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் ஒட்சிசன் தயாரிக்கும் நிறுவனங்களின் திறன் மற்றும் கையிருப்பு தொடர்பில் ஜனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் அவசியமான அளவு ஒட்சிசன் இதுவரையில் கையிருப்பில் உள்ளது.

மருத்துவமனைகளின் அவசர சிகிச்சைப் பிரிவுகள் தவிர்ந்த, ஏனைய இடங்களிலும் ஒட்சிசன் வழங்கக்கூடிய வசதிகளை ஏற்படுத்துவதில் அரசு கவனம் செலுத்தியுள்ளது - என்றார்.

## கொரோனாத் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரவலால் பொது இடங்களில் மக்கள் கூடுவதைத் தடுக்கும் வகையில், சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்ட பரிந்துரைகளுக்கு அமைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் அவர் அறிவித்தார்.

எனினும், எதிர்வரும் நாள்களில், முன்பதிவு செய்து கொண்ட விண்ணப்பதாரர்களுக்காக தேசிய அடையாள அட்டைகளை வழங்கும் நடவடிக்கை தபால் மூலம் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

தேசிய அடையாள அட்டைகளுக்காக இதுவரை விண்ணப்பிக்காதவர்கள், தமது விண்ணப்பங்களைப் பிராந்திய அலுவலகங்களில் வழங்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

அத்தோடு, தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்வதற்காகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை தமது பகுதிக்கான கிராம சேவகரிடம் ஒப்படைக்குமாறும் அவர் மக்களைக் கேட்டுக்கொண்டார்.

அத்துடன் பரீட்சைகள் மற்றும் கடவுச் சீட்டுகளைப் பெற்றுக்கொள்ளல் உள்ளிட்ட அவசர தேவைகளுக்காக தேசிய அடையாள அட்டையைப் பெற வேண்டுமென்றால் பிரதான அலுவலகத்தின் 0115 226 126 அல்லது 0115 226 100 என்ற தொலைபேசி எண்களுக்கு அழைப்பை ஏற்படுத்தி மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்வதற்காக, தென் மாகாணத்துக்கு 0912 228 348 என்ற தொலைபேசி இலக்கமும், வடமேல் மாகாணத்துக்கு 0372 224 337 என்ற தொலைபேசி இலக்கமும், கிழக்கு மாகாணத்துக்கு 0652 229 449 என்ற தொலைபேசி இலக்கமும், வடக்கு மாகாணத்துக்கு 0242 227 201 என்ற தொலைபேசி இலக்கமும் ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ளன.

## தம்மிக்க தயாரி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனை எடுத்துக்கொண்ட எவரிடத்திலும் எந்தவொரு முன்னேற்றமும் காணப்படவில்லை என ராஜரட்ட பல்கலைக்கழக மருத்துவ பீடத்தைச் சேர்ந்த டாக்டர் சேனக பிலபிட்டிய ஊடகங்களிடம் கருத்து வெளியிடும்போது கூறினார்.

தம்மிக்கவின் இந்த கொரோனா பாணியை சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன ஆகியோர் ஊடகங்கள் முன்னிலையில் அருந்திய நிலையில் இந்த பாணி குறித்த நம்பிக்கை மக்களிடையே ஏற்பட்டது.

எனினும் இதனை அருந்திய பின்னரும் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியராச்சி கொரோனாத் தொற்றுக்குள்ளகி பாதிக்கப்பட்டு மீண்டார்.

இந்நிலையில் ஆராய்ச்சிகளின் பின்னர் இந்தப் பாணி கொரோனாத் தொற்று நோயில் இருந்து பாதுகாப்பளிப்பதில் பயனற்றது என சுகாதார அமைச்சு நிபுணர் குழு அறிவித்தது.

இதேவேளை, இலங்கைக்கு தடுப்பூசி கிடைத்த பின்னர்தான் கைவிடப்பட்டதாக கடந்த மாதம் தம்மிக்க பெரேரா கருத்து வெளியிட்டிருந்தார்.

இதற்கிடையில் அவரது பாணி மருந்து பயனற்றது என ஆய்வுகளின் பின்னர் அறிவிக்கப்பட்டமை குறித்து தம்மிக்க பெரேரா இதுவரை எந்தக் கருத்துக்களையும் இதுவரை வெளியிடவில்லை.

## தனியார் பஸ்கள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் இன்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் கொரோனாக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள நிலையில், மேலதிக வகுப்புகள், பாடசாலைகள், பல்கலைக் கழகங்கள் என்பன இடைநிறுத்தப்பட்டுள்ளன.

அலுவலகங்களுக்குக் குறைந்த எண்ணிக்கையிலேயே ஊழியர்கள் அழைக்கப்படுகின்றனர். இதன் காரணமாக பஸ்களில் பயணிகளின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

இதன் காரணமாக பஸ்களின் எரிபொருள் செலவுக்கேனும் போதுமான வருமானத்தை ஈட்ட முடியாத நிலைக்கு பஸ் உரிமையாளர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

இவ்வாறான சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு நாளை திங்கட்கிழமை முதல் நாடளாவிய ரீதியில் 25 வீத பஸ்களை சேவையில் ஈடுபடுத்த முடிவெடுத்துள்ளோம் - என்றார்.

இதனிடையே பஸ் சேவையை மட்டுப்படுத்த இலங்கை போக்குவரத்துச் சபையும் முடிவு செய்துள்ளதாக அறிவித்துள்ளது.

பயணிகளின் எண்ணிக்கை குறைந்து வருவதாலும், பல ஊழியர்கள் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியமையாலும் இலங்கை போக்குவரத்துச் சபை இந்த முடிவை எடுத்துள்ளது எனத் தெரிவிக்கின்றது.

எனினும், பயணிகள் சிரமத்துக்கு ஆளாகாத நிலையில் அத்தியாவசிய சேவைகளை முன்னெடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் இலங்கை போக்குவரத்துச் சபை உறுதியளித்துள்ளது.

## அமைச்சர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் அவரின் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஆகியோருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து அமைச்சர் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

## தமிழகத்தின் புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தமிழகத் தேர்தல் முடிவுகளில் நேரடியாகத் தலையிட, நாம் அங்கே வாக்காளர்கள் அல்ல. ஆனால், அது பற்றி நாம் கண்டுகொள்ளாமல் இருக்க முடியாது. என்னைப் பொறுத்தவரையில் இலங்கை எமது தாய்நாடு. இந்தியத் தமிழகம் எங்கள் தந்தையர் நாடு.

அறிஞர் அண்ணா உருவாக்கி, மறைந்த முன்னாள் முதல்வர், கலைஞர் முத்துவேலு கருணாநிதி வளர்த்து விட்ட திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும், புரட்சித் தலைவர் எம்.ஜி. ராமச்சந்திரன் உருவாக்கி, மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா ஜெயராம் வளர்த்து விட்ட அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்துக்கும் இடையில் தான் ஆரம்பத்தில் இருந்தே பிரதான போட்டி. ஏனைய அனைத்து கட்சிகளும் துணை அரசியல் பாத்திரங்களையே வகிக்கின்றன.

தமிழக உடன் பிறப்புகள் தரும் ஜனநாயக முடிவுகளை ஏற்று அதை எப்படி எமக்கு பயனுள்ளதாக மாற்றிக்கொள்ள முடியும் என்பதை மட்டுமே, இலங்கையில் நாம் கணிக்க வேண்டும்.

மற்றபடி, தேர்தல் காலத்திலும் சரி, இன்றைய முடிவுகளின் போதும் சரி, தமிழக அரசியல் கட்சிகளை பற்றி, தமிழக அரசியல் தலைவர்களை பற்றி, தரக்குறைவாக பண்பற்று பேசி எமது உணர்வுகளை நாம் கொட்டக்கூடாது.

அப்படி ஆத்திரப்படும் அளவுக்கு, நமது நாட்டு தமிழ் அரசியல் தலைமைகளும், வரலாறு முழுக்க ஏதோ பிழையே செய்யாத அதி உத்தம யோக்கியர்களல்ல என்பதை நாம் மனதில்கொள்ள வேண்டும். இந்தியா தொடர்பில் நமது கட்சிகள், அமைப்புகள் பல தவறுகளை வரலாற்றில் செய்துள்ளன.

இலங்கையில் வாழும் ஒட்டுமொத்த தமிழர் பிரச்சினை என்பது, தமிழக மக்கள் முன்னாலே உள்ள பல்வேறு பிரச்சினைகளில் ஒன்றாகும். அங்கு வாழும் சுமார் எட்டு கோடி தமிழர், எமது உடன் பிறப்புகள். அந்த எட்டுக் கோடி என்பது எமது பாதுகாப்புக் கவசம்.

கடந்த காலங்களில் அந்த பாதுகாப்புக் கவசம் சரியாகப் பயன்படாமல் போய்விட்டது. இதற்கான காரணங்கள் பல. அவற்றை ஆராய்வது இப்போது உசிதமானதல்ல.

ஆகவே, கடந்த காலங்களை மறந்துவிட்டு, தமிழகத்தின் ஆளும் கட்சியையும், தமிழக முதல்வரையும் வாழ்த்தி வரவேற்போம் - என்றுள்ளது.

## ஸ்டாலினுக்குச் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உத்தியோகபூர்வ 'டுவிட்டர்' தளத்திலும் தனது உத்தியோகபூர்வ 'டுவிட்டர்' தளத்திலும் சுமந்திரன் எம்.பி. மேற்படி வாழ்த்துச் செய்தியைப் பதிவிட்டுள்ளார்.

## தமிழகத்தில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பத்து வருடங்களின் பின்னர் திராவிட முன்னேற்றக் கழகம் பெற்றுள்ள அபார வெற்றியாக இது பார்க்கப்படுகின்றது.

இதன்படி தமிழகத்தில் கடந்த பத்து வருடங்களின் பின்னர் மு.க.ஸ்டாலின் தலைமையில் தி.மு.க. கூட்டணியின் ஆட்சி மலர்கின்றது.

இந்நிலையில் தமிழகத்தின் அடுத்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு வாழ்த்துக்கள் எனப் பல பிரபலங்கள் தங்களது சமூக வலைத்தளங்களில் பதிவிட்டு வருகின்றனர்.

இதேவேளை, தி.மு.க. கூட்டணி சார்பில் போட்டியிட்ட ஸ்டாலினின் மகனும் பிரபல நடிகருமான உதயநிதி ஸ்டாலின் தனது தந்தையை விட அதிக வாக்குகளைப் பெற்று அமோக வெற்றியைத் தனதாக்கிக் கொண்டுள்ளார்.

## மேலும் சில ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன் களுத்துறை மாவட்டத்தின் பாணந்துறை தெற்கு பிரதேசத்தின் வடக்கு வேகட, கிரிபேரிய மற்றும் கிழக்கு பாலமுல்லை கிராம வேகர் பிரிவுகளும், நுவரெலியா மாவட்டத்தின் நீல தண்டாஹின்ன கிராம சேவகர் பிரிவும் முடக்கப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, திருகோணமலை மாவட்டத்தின் ஓர்ஸ் ஹில் மற்றும் அன்பு வழிபுரம் ஆகிய கிராம சேவகர் பிரிவுகளும் இன்று காலை முதல் முடக்கப்பட்டுள்ளன என்றும் இராணுவத் தளபதி மேலும் தெரிவித்துள்ளார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு - 076 443 8622




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## முதல்வராக மு.க.ஸ்டாலின்

தமிழக சட்டசபைத் தேர்தல் முடிவுக்கு வந்திருக்கிறது.

இன்று மாலை இந்தப் பத்திரியை வாசகர்கள் வாசிக்கும்போது அத்தேர்தலின் இறுதி முடிவுகள் வெளியாகிக் கொண்டிருக்கும்.

அகில இந்திய அண்ணா தி.மு.கவின் பத்தாண்டுகால தொடராட்சி முடிவுக்கு வருகிறது. பெரும்பாலும் இன்று மாலை தமது இராஜினாமாக் கடிதத்தை முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி தமிழக ஆளுநருக்கு அனுப்பிவைக்க ஏற்பாடு செய்திருப்பார் என எதிர்பார்க்கலாம்.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் புதிய முதல்வராகப் பதவியேற்கத் தயாராகிக் கொண்டிருப்பார். தனது புதிய அமைச்சரவைப் பட்டியலைத் தயார் செய்ய வேண்டிய நடவடிக்கைகளையும் அவர் ஆரம்பித்திருப்பார்.

மத்தியில் ஆளும் பாரதீய ஜனதாக் கட்சியும், மாநிலத்தில் ஆளும் அ.தி.மு.கவும் சேர்ந்து அமைத்த கூட்டணி இம்முறையும் – நாடாளுமன்றத் தேர்தலைப் போல – சட்டசபைத் தேர்தலிலும் பிசுபிசுத்துப் போயிருக்கின்றது.

மத்தியில் பிரதான எதிர்க்கட்சியாக காங்கிரஸ் கட்சியும் மாநிலத்தில் எதிர்க்கட்சியாக இருந்த தி.மு.கவும் அமைத்த கூட்டணி – நாடாளுமன்றத் தேர்தலைப் போல – வெற்றிக்கொடி நாட்டியிருக்கின்றது.

அ.தி.மு.க. ஆட்சியின் பல பிரபலங்கள் இம்முறை தோற்கடிக்கப்படும் நிலைமை ஏற்பட்டிருப்பதும் கவனிக்கத்தக்கது.

எதிரணியில் இருந்த தமது கட்சியையும் அதன் கூட்டணிக் கட்சிகளையும் கட்டுக்கோப்பாகக் கையாண்டு வெற்றிக்கொடியை எட்டிப் பிடிக்க வைத்திருக்கிறார் ஸ்டாலின்.

கூட்டணிக் கட்சிகளின் பங்களிப்பின்றியே தமது தி.மு.கவை மட்டும் – உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்றவர்களை மட்டும் வைத்து – ஆட்சி அமைக்கக்கூடிய வசதியான பொதுத் தேர்தல் பெறுபேறை ஈட்டியிருக்கின்றார் ஸ்டாலின்.

வலிமையான மக்கள் செல்வாக்குப் பெற்ற –'கரிஸ் மா' கொண்ட – தலைவர்கள் எவரும் தமக்கு எதிரணியாக அமரக் கூடிய தரப்பில் இல்லாத பின்னணியில், போதிய பெரும்பான்மையைப் பெற்றிருக்கும் மு.க.ஸ்டாலினால் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு நிலையான – உறுதியான – ஆட்சியைத் தரக் கூடியதாக இருக்கும்.

இதற்கு முன்னர் – பத்தாண்டுகளுக்கு முன்னர் – ஆட்சியில் இருந்த கலைஞர் கருணாநிதியின் தி.மு.க. அரசு, தனித்துப் பெரும்பான்மை பெற்றதல்ல. அப்போதைய எதிர்க்கட்சித் தலைவி செல்வி ஜெயலலிதா அந்த ஆட்சியை எப்போதுமே 'மைனாரிட்டி அரசு' (சிறுபான்மை அரசு) என்று விளித்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆனால் தந்தை கருணாநிதிக்குப் பின்னர் தி.மு.க. அரசை அமைக்கும் ஸ்டாலினுக்கு தாராளப் பெரும்பான்மையுடன் அதிகாரம் கிடைத்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

தந்தைக்குப் பின்னர் தனையன் என்ற வாரிசு முறையில் ஆட்சியின் தலைமையையும் அதன் மூலம் முதல்வர் பதவியையும் ஸ்டாலின் பெற்றிருந்தாலும் கூட, வெறும் வாரிசு முறையில் அதை ஈட்டியவரல்லர் அவர். நாற்பது ஆண்டுகளுக்கு மேல் கட்சித் தொண்டனாக அரும்பணியாற்றி, நெருக்கடிகள், சிக்கல்களை எதிர்கொண்டு, பல சவால்கள் மற்றும் அழுத்தங்களுக்கு நேரடியாக முகம் கொடுத்துத்தான் இந்த நிலைமைக்கு அவர் உயர்ந்திருக்கின்றார்.

சென்னை மேயர், தமிழக அமைச்சர் என்று பல பதவிகளை அலங்கரித்த அனுபவம் தாராளமாகக் கொண்டவர் அவர்.

தந்தை கருணாநிதி முதலமைச்சராக இருந்தபோது அவரின் கீழ் துணை முதலமைச்சராகப் பணியாற்றியவர். கடந்த பத்தாண்டுகளாக பொறுப்புள்ள எதிர்க்கட்சித் தலைவராகச் செயற்பட்டவர்.

குடும்ப வாரிசு ஆட்சி முறை என்ற குற்றச்சாட்டிலிருந்து தம்மையும் தமது குடும்பத்தையும் விடுவித்தால்தான் அவரின் பணி சிறப்புறும்.

அவரின் சகோதரி கனிமொழிதான் தி.மு.கவின் மகளிர் அணித் தலைவி. கட்சியின் சார்பில் ஒரு நாடாளுமன்ற உறுப்பினரும் கூட.

ஸ்டாலின் மகனும் நடிகருமான உதயநிதி ஸ்டாலின்தான் தி.மு.கவின் இளைஞரணித் தலைவர். இப்போது தந்தையைப் போல அவரும் சட்ட சபை உறுப்பினராகத் தேர்வாகின்றார். முதன் முதல் சட்ட சபைக்கு வரும் அவருக்கும் எடுத்த எடுப்பிலேயே அமைச்சர் பதவியை அளித்து குடும்ப ஆதிக்க அரசியலை புதிய முதல்வராகப் போகும் ஸ்டாலின் உறுதிப்படுத்தக் கூடாது.

இந்தத் தேர்தலில் தனித்துக் களத்தில் நின்ற சீமானின் நாம் தமிழர் கட்சி, நடிகர் கமலஹாசனின் மக்கள் நீதி மய்யம் ஆகியவை எதிர்பார்த்த தாக்கத்தை ஏற்படுத்தாவிட்டாலும் அவற்றின் வாக்குப் பலம் பிசுபிசுப்பித்துப் போகவில்லை என்பது நிரூபிக்கப்பட்டிருப்பதாக முதலில் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. இறுதி வாக்குகளின் நிலைவரம் வெளிவந்த பின்னர்தான் அவை செலுத்திய தாக்கம் பற்றி அறியக் கூடியதாக இருக்கும்.

டி.டி.வி. தினகரனின் அ.ம.மு.க., விஜயகாந்தின் தே.மு.தி.க. போன்றவையும் இந்தத் தேர்தலில் அடிபட்டுப் போயுள்ளன. அ.தி.மு.க. கூட்டணியில் விஜயகாந்தின் கட்சி நீடித்திருந்தால் அந்த இரு தரப்புகளுக்குமே சற்று வெற்றிமுகம் கிடைத்திருக்கலாம். பிரிந்து நின்று இரு தரப்புகளுமே கோட்டை விட்டுவிட்டன.

இன்னும் பல சுவராசியமான தொடர் நடவடிக்கைகளை இத் தேர்தல் முடிவுகளைத் தொடர்ந்து நாம் காணக்கூடியதாக இருக்கும்.

# அரசியல் கைதிகளின் பிரச்சினைகளைத் தீர்க்க மக்கள் விரும்பவில்லையோ எனச் சந்தேகம்?

### என்கிறார் அமைச்சர் டக்ளஸ்



கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும், நடந்த நாடாளுமன்றத்தேர்தலிலும் எமது கையைப் பலப்படுத்தினால் அரசியல் கைதிகளின் விடுதலை உடனடியாக இடம்பெறும் என்றேன் அது விருப்பமில்லாமலே மக்கள் தனக்குவாக்களிக்கவில்லை என மீன்பிடி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் மாவட்ட செயலகத்தில் மீன்பிடி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்ட மீன்பிடி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் பலர் உங்களிடம் நேரடியாகவே வருகைதந்து கோரிக்கை விடுத்துள்ளனர், இந்த விடயத்தில் அரசாங்கம் என்ன நிலைப்பாட்டில் உள்ளதுஎனஊடகவியலாளரொருவர் வினவியுள்ளார்.

இதற்குப் பதிலளித்த மீன்பிடி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா –

அரசாங்கத்துக்கு மாத்திரமல்ல பலருக்குப் பலவிதமான அபிப்பிராயங்கள் இருக்கின்றன. நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலிலும், நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலிலும் நான் மக்களிடம் கேட்டிருந்தேன்.

அரசியல்கைதிகள் தொடர்பாக எனக்குக் கூடிய வாக்குகளையும், கூடிய ஆசனங்களையும் தருமாறு கேட்டிருந்தேன். அப்படித் தந்திருந்தால் இந்தப் பிரச்சினையை உடனடியாகத் தீர்ப்பேன் என்றும் சொல்லியிருந்தேன்.

ஆனால் மக்கள் அந்தப் பிரச்சினையைத் தீர்க்க விரும்பவில்லையோ என்ற சந்தேகம் கூட எழுகின்றது எனத் தெரிவித்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடலின் போது முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்று வருகின்ற சட்டவிரோத மீன்பிடி நட வடிக்கைகளைக் கட்டுப்படுத்தல், வெளி மாவட்ட மீனவர்களுக்கு மீன்பிடி அனுமதி வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளன.

இந்தக்கலந்துரையாடலில் மீன்பிடி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன், கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர், கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் ம.உமாமகள் உள்ளிட்ட அரச அதிகாரிகள், இராணுவத்தினர், பொலிஸார், மீன்பிடி அமைப்பின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டுள்ளனர்.

# தமிழ்த் தேசிய மே நாள் நிகழ்வு கிளிநொச்சியில் நடைபெற்றது



தமிழ்த்தேசிய மே நாள் நிகழ்வு கிளிநொச்சியில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வு நேற்று (சனிக்கிழமை) பிற்பகல் 3.30 மணியளவில் கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் அ.சச்சிதானந்தம் தலைமையில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வு தமிழரசு கட்சி அலுவலக வளாகத்தில் இடம் பெற்றது.

இதன்போது, மே நாள் தொடர்பான உரைகள் இடம் பெற்றமையுடன் இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றினார்.

# தனிமைப்படுத்தல் விதி மீறிய மேலும் 187 பேர் கைதாகினர்

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 187 பேர் நேற்று (சனிக்கிழமை) கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண இதனைத் தெரிவித்தார்.

அதன்படி, இதுவரையில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 4 ஆயிரத்து 642 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என அவர் தெரிவித்தார்.

2020 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 31 ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

# சமையல் எரிவாயு சந்தையில் தட்டுப்பாடு

சந்தைகளில் சமையல் எரிவாயுவுக்கும், 12.5 கிலோகிராம் நிறை கொண்ட எரிவாயு கொள்கலன்களுக்கும் தட்டுப்பாடு நிலவுவதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

இது தொடர்பில் அதிகளவு முறைப்பாடுகள் கிடைத் துள்ளன என நுகர்வோர் சேவை அதிகார சபை தெரிவித்துள்ளது. இது தொடர்பில் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் சுமார் 200 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என அந்த அதிகார சபை தெரிவித்துள்ளது.

நுகர்வோர் சேவை அதிகார சபையின் கட்டளையை மீறி, லிற்றோ நிறுவனத்தால் 12.5 கிலோகிராம் சமையல் எரிவாயு கொள்கலனிற்குப் பதிலாக, 18 லீற்றர் அடங்கிய சமையல் எரிவாயு கொள்கலன்கள் சந்தைகளுக்குத் தற்போது விநியோகிக்கப்பட்டுள்ளன. இதனையடுத்து, அந்த சமையல் எரிவாயு கொள்கலன்களைச் சந்தைகளில் இருந்து உடனடியாக அகற்றுமாறு நுகர்வோர் சேவை அதிகார சபை லிற்றோ நிறுவனத்துக்கு அறிவித்திருந்தது.

எனினும், 12.5 கிலோகிராம் சமையல் எரிவாயு கொள்கலனிற்குப் பதிலாக, 18 லீற்றர் நிறைகொண்ட எரிவாயு கொள்கலன்களே சந்தைகளில் இருக்கின்றன என நுகர்வோரும், விற்பனை முகவர்களும் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது முடக்கம் மட்டுமே இந்தியாவுக்கான தீர்வு!

## அமெரிக்க மருத்துவ நிபுணர் பௌஸி வலியுறுத்து



'கொரோனாவின் இரண்டாவது அலையிலிருந்து தப்பிக்க அடுத்த சிலவாரங்களுக்குமுழுமுடக்கத்தை இந்தியா அறிவிக்க வேண்டும்!' என்று அமெரிக்காவின் மூத்த தொற்றுநோயியல்நிபுணர்அன்ரனி பௌஸி அறிவுறுத்தியிருக்கிறார்.

இந்தியாவில் கொரோனாவால் ஏற்படும் உயிரிழப்புகளை உலகமே அதிர்ச்சியோடு கவனித்துக் கொண்டிருக்கிறது. ஒக்சிஜன் பற்றாக்குறை மிக அதிகளவு இருப்பதைத் தொடர்ந்து, பல நாடுகள் இந்தியாவுக்கு விமானம் மூலம் மருத்துவ உதவிகளையும் ஒக்சிஜனையும் அனுப்பி வைத்துக் கொண்டிருக்கின்றன. ஒரு சில நாடுகள் நிதி உதவியும் வழங்கி வருகின்றன.

அமெரிக்காவின் மூத்த தொற்றுநோயியல் நிபுணர் அன்ரனி பௌஸி அளித்திருக்கும் பேட்டியொன்றில் இந்தியா இப்போது மிக மோசமான நிலையில் இருக்கிறது. இப்படியான சூழலில், உடனடித் தீர்வு என்னவென்பதையே இந்தியா பார்க்க வேண்டும். அந்த உடனடித் தீர்வு, பொது முடக்கம்தான். சில வாரங்களுக்காவது இந்தியா பொதுமுடக்கத்தில் இருக்க வேண்டும்.

யாருக்குமே நாடு தழுவிய முழு பொதுமுடக்கம் என்பது ஏற்கமுடியாத வியம்தான். ஆனால், இப்போதைய சூழலில் அதுமட்டுமே மிகச்சிறந்த பலனைத் தரும். இந்தப் பொது முடக்கத்தை ஆறு மாதங்கள் வரை முழுவதுமாக நீட்டிக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை. அடுத்த சில வாரங்களுக்குப் பொது முடக்கத்தை அமல்படுத்தினால் போதும்.

சிறிது சூழல் சரியான பின்னர் அந்தமுடக்கத்தைதளர்த்திக்கொண்டு செயல்படத் தொடங்கலாம். இதனால் கொரோனா பரவுதலும் தடுக்கப்படும் பொருளாதார பின்னடைவும் ஓரளவு தவிர்க்கப்படும். அதை விட்டுவிட்டு, இந்தியாவில் கொரோனா ஒழிந்து விட்டது என அறிவிப்பது அவசரத்தில் செய்யும் செயல் எனக் கூறியுள்ளார்.

## கன்னியாகுமரி மக்களவை இடைத்தேர்தல் உத்தியோகப்பற்றற்ற முடிவின்படி

# விஜய் வசந்த் வெற்றி!



கன்னியாகுமரி மக்களவைத் தொகுதிக்கான இடைத்தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டுவரும் நிலையில் காங்கிரஸ் கட்சியைச்சேர்ந்த விஜய் வசந்த் வெற்றிபெற்றுள்ளார் என உத்தியோக பூர்வமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

கன்னியாகுமரி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த காங்கிரஸ்கட்சியைச்சேர்ந்த வசந்தகுமார், கொரோனா தொற்றுக் காரணமாக கடந்த ஆண்டு உயிரிழந்தார். இதையடுத்து சட்டப்பேரவைத் தேர்தலுடன் கன்னியாகுமரி மக்களவை தொகுதிக்கான இடைத்தேர்தலும் நடத்தப்பட்டது.

காங்கிரஸ் கட்சி சார்பில் மறைந்த வசந்தகுமாரின் மகனும் நடிகருமான விஜய் வசந்தும் பா.ஜ.க. சார்பில்கடந்தமுறைவசந்தகுமாரிடம்தோல்வியடைந்த பொன்.இராதாகிருஷ்ணனும் களம் இறங்கியிருந்தனர். கடந்த மாதம் 6 ஆம் திகதி நடைபெற்ற கன்னியாகுமரி மக்களவை இடைத்தேர்தலில் 68.80 சதவீத வாக்குகள் பதிவாகியிருந்தன.

கன்னியாகுமரி நாடாளுமன்றத் தொகுதிக்கான இடைத்தேர்தலில் பதிவான வாக்குகள் தற்போது எண்ணப்பட்டுவரும் நிலையில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த விஜய் வசந்த் முன்னிலையிலும், பா.ஜ.கவின் பொன்.ராதாகிருஷ்ணன் பின்னடைவைச் சந்தித்துமிருந்தனர்.

இந்தச் செய்தி பிரசுரமாவதற்கு சற்று முன்னர், அறுபதாயிரத்துக்கும் அதிகமான வாக்குகள் வித்தியாசத்தில் விஜய் வசந்த் வெற்றி பெற்றிருக்கிறார் என உத்தியோக பூர்வமற்ற தகவல்கள் தெரிவித்துள்ளன.

## கேரள தேர்தல் முடிவுகள் இடதுசாரிக் கூட்டணி முன்னிலை

கேரளா மாநில சட்டப்பேரவைத் தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டு வரும் நிலையில் அங்கு ஆளுங்கட்சியாக இருக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி முன்னிலை வகிக்கிறது.

கேரளாவில் உள்ள 140 சட்டசபை தொகுதிகளுக்கும் கடந்த ஏப்ரல் ஆறாம் திகதி ஒரே கட்டமாக தேர்தல் நடந்தது. ஆளும் இடதுசாரி ஜனநாயக முன்னணி, காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி, பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆகியவற்றுக்கு இடையே மும்முனைப் போட்டி நிலவியது.

கேரள மாநில சட்டப்பேரவைத் தேர்தலில் பதிவான வாக்குகள் தற்போது எண்ணப்பட்டு வரும் நிலையில் அங்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் காங்கிரஸ் கட்சிக்கும் இடையே முன்னிலையில் கடும் போட்டி நிலவுகிறது.

மொத்தம் 140 பேரவைத் தொகுதிகளைக் கொண்ட கேரளத்தில் ஆட்சி அமைப்பதற்கு 71தொகுதிகளில் வெற்றி பெறவேண்டும்என்பதுகவனிக்கத்தக்கது.

## பிரான்ஸின் மருத்துவ உதவி விமானம் அதிகாலையில் இந்தியாவை இறங்கியது



பிரான்ஸில் இருந்து மருத்துவப் பொருள்களை ஏற்றி வந்த விமானம் இன்று அதிகாலையில் இந்தியாவை வந்தடைந்துள்ளது.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய இந்தியாவிற்கான பிரான்ஸ் நாட்டின் தூதர் இமானுவேல் லெனெய்ன், அனைத்து பிரெஞ்சு பொது, தனியார் நிறுவனங்களும் பிரான்ஸில் உள்ள மக்களும் இந்தியாவில் என்ன நடக்கிறது என்பதை கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இந்தியாவுடனான ஒற்றுமையைக் காட்ட விரும்புகிறார்கள்.

எனவே, நாங்கள் அதிகமான நிதிஉதவிகளைத்திரட்டியுள்ளோம். இந்திய மருத்துவமனைகளுக்கு சுய சார்பு நிலையைக் கொண்டு வருவதற்காக இது போன்ற மருத்துவ உபகரணங்களுடன் மாத இறுதிக்குள் மற்றொரு விமானத்தை நாங்கள் கொண்டுவர உள்ளோம்என்றுதெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு உதவி வழங்க நாங்கள் அமைச்சகம் மற்றும் நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றி வருகிறோம். கடந்த ஆண்டு இந்தியா எங்களுக்கு உதவியது. இப்போது இந்தியா சிரமத்தைச் சந்தித்து வருவதால் எங்களுக்கிடையிலான ஒற்றுமையைக்காட்டநாங்கள்விரும்பினோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## அசாமில் மீண்டும் பா.ஜ.க. ஆட்சி முதலமைச்சர் சோனாவால் நம்பிக்கை



அசாம் மாநிலத்தில் உள்ள126தொகுதிகளுக்கு 3 கட்டங்களாக தேர்தல் நடைபெற்றது. இந்தத் தேர்தலில் பா.ஜ.கவுக்கு போட்டியாக காங்கிரஸ் கட்சியும்பெரியகூட்டணியை அமைத்தது. தேர்தலில் பதிவானவாக்குகள் இன்று காலை 8 மணி முதல் எண்ணப் பட்டு வருகின்றன. இதில், தற்போதைய நிலவரப்படி பா.ஜ.க. 84 இடங்களிலும் காங்கிரஸ் 41 இடங்களிலும் முன்னிலை வகிக்கிறது.

பா.ஜ.க. பெரும்பான்மைக்குத் தேவையான இடங்களைத்தாண்டி முன்னிலை வகித்து வரும் நிலையில், அசாமில் பா.ஜ.கவே மீண்டும் ஆட்சி அமைக்கும் என்பது தெளிவாகத் தெரிகின்றது என மாநில முதலமைச்சர் சர்பானந்த சோனாவால் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

## புட்னிக்—வி தடுப்பூசித் தொகுதி இந்தியாவை வந்தடைந்தது

ரஷ்யாவின் தயாரிப்பான கொரோனா ஸ்புட்னிக்-வி தடுப்பூசிகளின் தொகுதியொன்று நேற்று ஹைதராபாத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்தியாவில்தற்போதுகொவொக்சின், கொவிஷீல்ட் ஆகிய இரண்டு கொரோனா தடுப்பூசிகள் பயன்பாட்டில் இருக்கின்றன. கடந்த ஜனவரி 16 ஆம் திகதி மக்களுக்கு தடுப்பூசி அளிக்கும் திட்டம் தொடங்கியது. நேற்று முதல் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி செலுத்தும் பணியும் தொடங்கப்பட்டது. இதன் காரணமாக தடுப்பூசிக்கான தேவையும் அதிகரித்துள்ளது.

இந்நிலையில் கொரோனா தொற்று பரவுவதைத் தடுப்பதற்காக வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யும் தடுப்பூசிகளையும் பயன்படுத்துவதற்கு மத்திய அரசு அனுமதி அளித்தது. அதன்படி, ரஷ்யாவில் இருந்து ஸ்புட்னிக்-வி தடுப்பூசியை வாங்கி விநியோகிக்கும் உரிமையை ஹைதராபாத்தைச் சேர்ந்த டாக்டர் ரெட்டி நிறுவனம் பெற்றது.

ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி ரஷ்யாவில் இருந்து முதல் கட்ட ஸ்புட்னிக்-வி தடுப்பூசித் தொகுதி விமானம் மூலம் நேற்று ஹைதராபாத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்தத் தடுப்பூசிகள் இன்று முதல் மக்களுக்கு செலுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## டெல்லி கொரோனா நிலையத்தில் பணியாற்றிய இளம் மருத்துவர் தற்கொலை

இந்தியாவில் கொரோனாவின் இரண்டாவது அலையின் தாக்கம் தீவிரமடைந்து வரும் நிலையில், பல்வேறு மாநிலங்களில்உள்ளமருத்துவமனைகளில் ஒக்சிஜன், படுக்கை வசதி, மருந்துகளுக்கு தட்டுப்பாடும் காணப்படுவதாக செய்திகள் வெளியாகிவருகின்றன. குறிப்பாக தலைநகர் டெல்லியில் உள்ள பல்வேறு மருத்துவமனைகளில் இந்தத் தட்டுப்பாடு அதிகமாகியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான நிலையில், டெல்லியில் உள்ள தனியார் மருத்துவமனையின் கொரோனா சிகிச்சைப் பிரிவில் பணியாற்றி வந்த விவேக் ராய் என்ற மருத்துவர் நேற்று தற்கொலை செய்துகொண்ட விடயம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும்கொரோனா நோயாளிகள் தொடர்ந்து உயிரிழந்து வருவதால் கடுமையான மன அழுத்தத்தில் இருந்த மருத்துவர் விவேக் ராய், தற்கொலை செய்துகொள்ளும் முடிவை எடுத்திருக்கலாம் என்று இந்திய மருத்துவ கவுன்ஸிலின் முன்னாள் தலைவர் ரவி வாங்கர் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாக, டுவிட்டரில் பதிவிட்ட அவர், 'உத்தரப்பிரதேசத்தின் கோரக்பூரைச் சேந்த சிறந்த மருத்துவர் விவேக் ராய். இந்த பெருந்தொற்றுக் காலத்தில் அவர் நூற்றுக்கணக்கான உயிர்களைக் காப்பாற்றியுள்ளார். இந்த அழுத்தங்கள் நிறைந்த சூழ்நிலையில், தனது கண்காணிப்பில் இருந்து உயிரிழந்த நோயாளிகளை நினைத்து அந்தத் துன்பங்கள் மற்றும் உணர்ச்சிகளுடன் வாழ்வதைவிடதனதுசொந்தவாழ்க்கையை முடித்துக்கொள்வது என்ற கடினமான முடிவை விவேக் ராய் எடுத்திருக்கிறார்' என்றுதனதுஎண்ணத்தைக்கூறியிருக்கிறார்.

'கொரோனா நெருக்கடியை நிர்வகிக்கும் போது அது மிகப்பெரிய உணர்ச்சிகரமான அழுத்தத்தை ஒவ்வொருவருக்கும் கொண்டுவருகிறது. தட்டுப்பாடுடைய மருத்துவ வசதிகளால் உருவாக்கப்பட்ட அழுத்தங்களால் நிர்வாக கட்டமைப்பு செய்த கொலைதான் இந்த இளம் மருத்துவரின் மரணம். மோசமான அறிவியல், மோசமான அரசியல், மோசமான நிர்வாகம்' என்றும் அவர் தனது பதிவில் சாடியிருக்கிறார்.

தற்கொலை செய்துகொண்ட மருத்துவர் விவேக் ராய்க்கு கடந்த வருடம் தான் திருமணம் நடைபெற்றது என்றும் அவரது மனைவி கர்ப்பிணியாக உள்ளார் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# உலக அளவில் கொரோனாவால் பலியானோர் எண்ணிக்கை 32 லட்சத்தை தாண்டியது

சீனாவின் வுகான் நகரில் வெளிப்பட்ட கொரோனா வைரஸ் உலக நாடுகளை உலுக்கிவருகிறது. கொரோனா பாதிப்பு அதிகமுள்ள நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா, இந்தியா, பிரேஸில், பிரான்ஸ், துருக்கி ஆகியவை முதல் 5 இடங்களில் உள்ளன.

இந்நிலையில், உலகம் முழுவதும் வைரஸ் தாக்குதலுக்கு உயிரிழந்தோர் எண்ணிக்கை 32 லட்சத்தைத் தாண்டியுள்ளது.




உலக அளவில் கொரோனா வால் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கை 15 கொடியே 26 லட்சத்தை கடந்துள்ளது.

மேலும், கொரோனா பாதிப்பில் இருந்து இதுவரை 12 கோடியே 98 லட்சத்துக்கும் அதிகமானோர் குணமடைந்துள்ளனர்.

வைரஸ் பரவியவர்களில் 1 கோடியே 89 லட்சத்துக்கும் அதிகமானோர் சிகிச்சை பெற்று வருகின்றனர். சிகிச்சை பெறுபவர்களில் 1 லட்சத்து 12 ஆயிரத்துக்கு மேற்பட்டோரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

# விண்வெளியிலிருந்து எடுக்கப்பட்ட பிங்க் சூப்பர் மூன் புகைப்படம்



பூமியின் சுற்றுப்பாதையிலிருந்து எடுக்கப்பட்ட பிங்க் சூப்பர் மூன் புகைப்படத்தை சர்வதேச விண்வெளி நிலையம் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவிட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டின் முதல் சூப்பர் மூன் – ஆனது கடந்த மாதம் 27 ஆம் திகதி தோன்றியது. அர்ஜெண்டினா, வெனிசூலா, சிலி, துருக்கி உள்ளிட்ட நாடுகளில் 3 நாள்களுக்கு பிரம்மாண்டமாக காட்சியளித்த சூப்பர் மூனை அப்பகுதி மக்கள் கண்டு ரசித்தனர்.

இந்நிலையில் பூமியின் சுற்றுப்பாதையிலிருந்து எடுக்கப்பட்ட பிரமிக்க வைக்கும் பிங்க் சூப்பர் மூன் புகைப்படத்தை இன்ஸ்டாகிராமில் பகிர்ந்துள்ள சர்வதேச விண்வெளி நிலையம், சந்திரன் எந்த திசையில் இருந்தாலும் அது விண்வெளியிலிருந்து பார்க்க பிரகாசமாகவே இருக்கும் என குறிப்பிட்டுள்ளது.



# உலகின் முதல் கர்ப்பிணி மம்மி போலந்து நாட்டில் கண்டுபிடிப்பு

## 20 வயதான இளம் மம்மி என ஆராய்ச்சியாளர்கள் தகவல்

உலகில் முதல் முறையாக போலந்து நாட்டில் கருவுற்ற நிலையில் உள்ள மம்மியை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்து உள்ளனர்.

19 ஆம் நூற்றாண்டில் போலாந்து நாட்டுக்கு கொண்டு வரப்பட்ட மம்மியை ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு செய்தனர். மம்மியின் உடல் வாகுவை கொண்டு பாதிரியார் என்று குறிப்பிடப்பட்டு இருந்த நிலையில் ஆய்வு மேற்கொண்ட ஆராய்ச்சியாளர்களுக்கு பேரதிர்ச்சியாக மம்மி ஒரு கர்ப்பிணி பெண் என்பது தெரிய வந்தது.

மேலும் மம்மிக்கு 20 வயது இருக்கலாம் என்றும் அதன் வயிற்றில் 26 முதல் 28 வார சிசு இருந்ததாகவும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்து உள்ளனர்.

இதன் மூலம் உலகில் கண்டறியப்பட்ட மம்மிகளில் மிகவும் பாதுகாக்கப்பட்ட கர்ப்பிணி மம்மி இது என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்து உள்ளனர்.

# இந்தியாவில் இருந்து ஆஸ்திரேலியர்கள் திரும்பி வருவது குற்றம்; 5 ஆண்டு சிறை

இந்தியாவில் இருக்கும் ஆஸ்திரேலியர்கள் தங்கள் சொந்த நாட்டுக்குத் திரும்பி வருவது குற்றம் என்று ஆஸ்திரேலியா அறிவித்துள்ளது.




அப்படித் திரும்பி வருகிறவர்களுக்கு 5 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனையும், அபராதமும் விதிக்கப்படலாம். தனிமைப்படுத்தி வைக்கப்பட்டுள்ளவர்களில் இந்தியாவில் கோவிட் 19 நோய் தொற்றிக் கொண்டவர்கள் விகிதத்தை அடிப்படையாக கொண்டு இந்த சட்டம் போடப்பட்டுள்ளது என ஆஸ்திரேலியாவின் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வாரத் தொடக்கத்தில், இந்தியாவில் இருந்து வரும் அனைத்து விமானங்களுக்கும் தடை விதித்தது ஆஸ்திரேலியா. இந்தியாவில் சுமார் 9 ஆயிரம் ஆஸ்திரேலியர்கள் இருக்கிறார்கள். அவர்களில் 600 பேர் பாதிப்புக்கு உள்ளாகக் கூடியவர்கள் என்று வகைப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

இந்த நடவடிக்கை குறித்து ஆஸ்திரேலியன் டிவியிடம் பேசிய ஒரு மருத்துவர், இந்தியாவில் இருந்து திரும்பி வருகிறவர்களால் ஏற்படும் ஆபத்தின் அளவைக் காட்டிலும் அதிதீவிரமான நடவடிக்கை இது என்று கூறியுள்ளார்.

மீட்கப்படுவதற்கு வழி இல்லாமல் இந்தியாவில் நமது குடும்பங்கள் செத்துக்கொண்டிருக்கின்றன. இது கைவிடும் செயலாகும் என்று சுகாதார விமர்சகர் டாக்டர் வியோம் ஷர்மா கூறியுள்ளார்.

திங்கட்கிழமையில் இருந்து 14 நாள்களுக்குள் இந்தியாவில் இருந்து ஆஸ்திரேலியா திரும்பவேண்டிய நிலையில் இருப்பவர்கள் அனைவரும் ஆஸ்திரேலியாவுக்கு நுழைவது தடை செய்யப்படுகிறது.

இந்த புதிய விதியை மதிக்கத் தவறுகிறவர்களுக்கு 5 ஆண்டு சிறைத் தண்டனையோ, சுமார் இலங்கை ரூ.95 லட்சத்துக்கு இணையான அபராதமோ அல்லது இரண்டுமே விதிக்கப்படும். மே 15 ஆம் திகதி இந்த தடை மறுபரிசீலனை செய்யப்படும் என்கிறது சுகாதார அமைச்சகம்.

இந்த முடிவை எளிதாக எடுத்துவிடவில்லை என்று தெரிவித்த ஆஸ்திரேலிய சுகாதார அமைச்சர் கிரெக் ஹன்ட், ஆஸ்திரேலிய பொதுச் சுகாதார அமைப்பு மற்றும் தனிமைப்படுத்தல் முறையின் மீதான நம்பகத் தன்மை பாதுகாக்கப்படுவது அவசியம். தனிமைப்படுத்தல் மையத்தில் கோவிட் நோயாளிகள் எண்ணிக்கையை சமாளிக்கக் கூடிய அளவில் குறைவாக வைத்திருப்பதும் முக்கியம் என்று தெரிவித்துள்ளார்.

# சீனாவில் அமைந்துள்ள தேசிய பூங்காவில் 1,631 பாண்டாக்கள் வாழ்வதாக தெரிவிப்பு

சீனாவில் அமைந்துள்ள தேசிய பூங்காவானது பாண்டாக்கள், பனிச் சிறுத்தைகள் உள்ளிட்ட பல்வேறு விலங்குகளுக்கு வாழிடமாக உள்ளது.



சிச்சுவான் மாகாணத்தில், சுமார் 27 ஆயிரம் சதுர கிலோமீட்டர் பரப்பளவில் அமைந்துள்ள இந்தப் பூங்கா, பாண்டாக்கரடிகள் குட்டிகளை ஈனுவதற்கும், அவற்றை வளர்ப்பதற்கும் சொர்க்க பூமியாக விளங்கி வருகிறது.

இங்கு மொத்தம் ஆயிரத்து 631 பாண்டாக்கள் வாழ்கின்றன.

இந்தப் பூங்காவில் பாண்டாக்கள் மட்டுமன்றி, காட்டெருமைகள், பனி சிறுத்தைகள், மான்கள், வித்தியாசமான பறவைகள் இருப்பது அங்கு வைக்கப்பட்டுள்ள சி.சி.டி.வி. கமராவில் பதிவாகியுள்ளது.

# இந்தியாவில் இருந்து அமெரிக்காவிற்கு மே 4 முதல் வரத் தடை; வெள்ளை மாளிகை

இந்தியாவில் தற்போது கொரோனா வைரசின் 2 ஆவது அலை வேகமாக பரவி வருகிறது. இதனால் பல்வேறு நாடுகள் இந்திய விமானங்களுக்கு தடை விதித்துள்ளன. இந்தியாவுக்கு பயணம் மேற்கொள்வதை தவிர்க்க வேண்டும் என்று பயணிகளுக்கு அமெரிக்கா அறிவுறுத்தி உள்ளது.



இதற்கிடையே, இந்தியாவில் இருக்கும் அமெரிக்கர்கள் நாடு திரும்ப வேண்டும் என்று அமெரிக்க வெளியுறவுத்துறை அறிவுறுத்தி இருக்கிறது.

இதுதொடர்பாக, அமெரிக்க வெளியுறவுத்துறை கூறுகையில், இந்தியாவில் கொரோனா வைரஸ் பரவல் அதிகரிப்பு காரணமாக அனைத்து வகையான மருத்துவ சேவைகளை அணுகுவது கடுமையாகப் பாதிக்கப்பட்டு இருக்கிறது. எனவே இந்தியாவில் இருக்கும் அமெரிக்க குடிமக்கள் எவ்வளவு சீக்கிரம் வெளியேறுகிறீர்களோ அவ்வளவு பாதுகாப்பானது. இந்தியாவை விட்டு நாடு திரும்ப விரும்பும் அமெரிக்க குடிமக்கள் இப்போது கிடைக்கக்கூடிய வணிக போக்குவரத்துகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என தெரிவித்துள்ளது.

இந்நிலையில், மே 4 ஆம் திகதி முதல் இந்தியாவில் இருந்து அமெரிக்கா வருவதற்கு தடை உள்ளிட்ட கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது. அமெரிக்கர்கள் மற்றும் நிரந்தர குடியுரிமை பெற்றவர்களுக்கு இதில் விலக்கு அளிக்கப்பட்டுள்ளதாக வெள்ளை மாளிகை செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

# ஆப்கானிஸ்தானில் கார்க்குண்டு வெடிப்பு

ஆப்கானிஸ்தானின், லோகர் மாகாணத்தின் புல் – இ – ஆலம் என்ற நகரில் நடத்த பாரிய கார் வெடிகுண்டுவெடிப்பு தாக்குதலில் 30 பேர் உயிரிழந்துள்ளனர்.

இது குறித்து காவல் துறை அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

ஆப்கானிஸ்தானில் நிகழ்ந்த கார் வெடிகுண்டு தாக்குதலில் மாணவர்கள் உள்பட 30 பேர் கொல்லப்பட்டு உள்ளனர். 70க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். இந்த குண்டுவெடிப்புசம்பவத்தில் மருத்துவமனை கட்டடம் மற்றும் மருத்துவ மனையில் நிறுத்தப்பட்டிருந்த அம்புலன்ஸ்கள் ஆகியவை பலத்த சேதமடைந்தன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புளுட்டுமானோடையில் பௌத்த மத்தியஸ்தானம்

## கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கள விஜயம்

மட்டக்களப்பு, மே 02

மட்டக்களப்பு புளுட்டுமானோடை பகுதியில் பௌத்த மத்தியஸ்தானம் அமைப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் இடம்பெற்றமையால் இதனைத் தடுக்கும் நோக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தலைமையிலான தமிழ்மக்கள் பிரதிநிதிகள் நேரடியாக கள விஜயம் மேற்கொண்டு பார்வையிட்டதுடன் பௌத்த மத்தியஸ்தானம் அமைத்தால் அதற்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சட்ட நடவடிக்கை மேற்கொள்ளும் எனவும் தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பு ஏறாவூர்ப் பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட ஈரளக்குளம் புளுட்டுமானோடைப் பகுதியில் உள்ள பண்டைய வரலாற்றுடன் தொடர்புபட்ட பிரதேசத்தினை அண்மையில் அரச அதிகாரிகள், தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள்,பௌத்த பிக்குகள் ஆகியோர் சென்றுபார்வையிட்டுஅவ்விடத்தில் பௌத்த மத்தியஸ்தானம் அமைப்பதற்கான பூர்வாங்கஏற்பாடுகள்மேற்கொள்ளப்படுவதாக வெளிவந்த தகவல்களைத் தொடர்ந்து நேற்று சனிக்கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மக்கள் பிரதிநிதிகள் அவ்விடத்திற்கு கள விஜயமொன்றை மேற்கொண்டிருந்தனர்.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மற்றும் கோ.கருணாகரம், இரா. சாணக்கியன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், சீ.யோகேஸ்வரன், ஞா.சிறிநேசன், முன்னாள் மாகாணசசபைப் பிரதித் தவிசாளர் இந்திரகுமார் பிர சன்னா, மாகாண சபை உறுப்பினர் மா.நடராசா, உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள், பிரதித் தவிசாளர்கள், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வாலிபர் முன்னணித் தலைவர் கி.சேயோன் உள்ளிட்ட பலரும் இவ்விடயத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

குறித்த பிரதேசத்தின் நிலை மைகள் மற்றும் சூழமைவுகள் தொடர்பில் இவர்கள் பார்த்து பரிசீலித்தனர்.இப்பிரதேசம் பண்டைய வரலாற்றுடன் தொடர்புபட்ட பிரதேசமாக இருப்பதுடன் பல செதுக்கல்கள், படி அமைப்புகள்போன்றனவும்இங்குஅமைக்கப்பட்டிருந்தமை மேற்படி பிரதேசம் தொல்பொருள் சார்ந்த பிரதேசமாக இருந்தாலும், இதனை வைத்து இது பௌத்தத்திற்குரியது என்று சொல்லி பௌத்த விடயங்களை முன்னெடுப்பதை நோக்காகக் கொண்டு அரசு செயற்பட முனையக் கூடாது, அதிகாரிகளும்அவ்வாறானசெயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு நல்கக் கூடாது, அவ்வாறான ஒரு நிலைமை ஏற்படின் அதற் கெதிரான நடவடிக்கைகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேற்கொள்ளும் என்ற அடிப்படையில் ஊடகங்கள் வாயிலாக அவரவர் கருத்துக்களை வெளியிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## கல்முனை மாநகர பிரதேசங்களில் களைகட்டும் பண்டிகை வியாபாரம்

### பிந்திய இரவுகளிலும் கடும் உன்னிப்பாக கண்காணிக்கும் சுகாதாரப் படை





(நூருல் ஹூதா உமர்)

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.எம்.அல் அமீன் றிசாட் மற்றும் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் ஆகியோரின் கண்காணிப்பில் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஜே.நிஸ்தாரின் நெறிப்படுத்திலில் பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.எம்.பைசால் தலைமையிலான குழு சாய்ந்தமருது பிரதேசத்தில் கொவிட் -19 தினை கட்டுப்படுத்துமுகமாக பொது இடங்களுக்கு திடீர் விஜயம் ஒன்றினை நேற்று சனிக்கிழமை இரவு 9.30 மணிவரை மேற்கொண்டனர்.

இந்தக் கள விஜயத்தில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும்சாய்ந்தமருதுபிரதேசசெயலகஉத்தியோகத்தர்கள், பட்டதாரி பயிலுநர்கள்,பல்நோக்கு அபிவிருத்தி செயலணி திணைக்களத்தின் பயிலுநர்களும் கலந்து கொண்டனர்.

வெசாக் மற்றும் நோன்பு பெருநாள் பண்டிகை காலம் என்பதனால் மக்கள் புத்தாடைகள் மற்றும் பண்டிகைகால கொள்வனவில் சாய்ந்தமருது வர்த்தக நிலையங்களில் பரபரப்பாக இயங்கிவருவதனால் சாய்ந்தமருது மாளிகைக்காடு வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் தொடர்ச்சியாக ஒலிபெருக்கி மூலம் மக்களுக்கு சுகாதார விழிப்புணர்வும், அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டு வருகிறது.

இதன்போது மக்கள் கூடும் இடங்களுக்கும் திடீர்விஜயம்மேற்கொண்டுசுகாதார வழிமுறைகளை பின்பற்றாதோர் மீது நடவடிக்கை எடுத்ததுடன், கொவிட்-19 பரிசோதனைகளையும்மேற்கொண்டனர்.

# கல்முனை பிரச்சினையைத் தீர்க்க அரசாங்கம் முன்வர வேண்டும்

## அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம் கோரிக்கை

**(நூருல் ஹூதா உமர், ஐ.எல்.எம். நாஸிம்)**




கடந்த 30 வருடங்களில் 27 வருடங்களாக வெற்றிகரமாக நடத்திய தொழிலாளர் தின நிகழ்வுகளை கடந்தமூன்றாண்டுகள்தொடர்ச்சியாக நாட்டின் அசாதாரண சூழ்நிலைகளின் காரணமாக நடத்த முடியாமல் போகியுள்ளது. வடக்கு கிழக்கில் வாழும் தொழிலாளர்களின் நிலை மோசமாக உள்ளது. அரச ஊழியர்களின் நலன் கருதி அரசு சம்பளத்தை 25,000 ரூபாவால் அதிகரிக்க முன்வரவேண்டும்.

அது போலவே ஓய்வூதியம் பெறுவோரின் தொகையும் 15,000ரூபாவால் அதிகரிக்க வேண்டும். விலைவாசி அதிகரிப்பால் கஷ்டப்படும் அரச ஊழியர்களின் நலனில் கடந்த நல்லாட்சியும் கவனத்தில் எடுக்கவில்லை. இந்த அரசும் அக்கறை செலுத்தாமை கவலையளிக்கிறது.

இந்த அரசாங்கத்தை நிறுவனாங்களின் தொழிற்சங்கம் முதல் நாட்டில் உள்ள முக்கிய எல்லா தொழிற்சங்கமும் கடுமையாக கஷ்டப்பட்டுழைத்தோம். என்ற ரீதியில் இந்த மேதின கோரிக்கையாக நாங்கள் முன்வைக்கும் இந்த கோரிக்கையை அரசு கவனத்தில் எடுக்க வேண்டும் என அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் தலைவர் எஸ். லோகநாதன் கேட்டுக்கொண்டார்.

மேதினத்தை முன்னிட்டுகல்முனைபுலவிப்பிள்ளையார் ஆலயத்தில் மேதினமன்று நடைபெற்ற விசேட பூஜையை தொடர்ந்து கல்முனையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு பேசும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அண்மையில் வெளியாகியுள்ள பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்றுநிருபத்திற்கிணங்க யாராலும் நியமனம் வழங்க முடியாத துர்ப்பாக்கிய நிலை உருவாகியுள்ளது. அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஆளுநர்கள், உள்ளூராட்சி மன்ற தலைவர்கள் என யாருமே சிற்றூழியர் நியமனம் கூட வழங்க முடியாத நிலை இப்போது உருவாகியுள்ளது. எங்களின் தொழிற்சங்க போசகராக உள்ள அமைச்சர்டக்ளஸை அண்மையில் சந்தித்து யுத்தம், அனர்த்தம் போன்றவற்றால் அதிகம் பாதிக்கப்பட்ட நியமனம் வழங்கப்பட வேண்டிய வடக்கு கிழக்கு வாழ் மக்களின் பிரச்சினைகளை பற்றி பேசியுள்ளோம்.

எங்களின் மேதினக் கோரிக்கைகளாக இந்த ஊடக சந்திப்பின் வாயிலாக அரசுக்கு நாங்கள் வடக்கு கிழக்கை இணைத்து சுய ஆட்சியை உருவாக்க வேண்டும் என்றும் புதிய அரசியலமைப்பில் மாநில சுய ஆட்சியை வலியுறுத்துமாறும் கேட்டுக்கொள்கிறோம்.

கடந்த 30 வருடங்களாக தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களின் நலனுக்காக சேவை செய்யும் கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை தரமுயர்த்தி தருமாறு கோரிக்கை முன்வைக்கிறோம். பல ஆணைக் குழுக்களில் நானும் சாட்சியம் வழங்கினேன் எதுவும் நடக்கவில்லை. தும்புத்தடி வாங்குவதற்கும் கல்முனை செயலகத்தில் கையேந்தும் நிலை இருக்கிறது. முஸ்லிம் அரசியல்வாதிகள் இந்த தரமுயர்வை விரும்பாது தடுத்து வருகிறார்கள். எங்களுக்கு இனவாதமோ, பிரதேச வாதமோ இல்லை. தம்புள்ளை அழுத்கமவில் முஸ்லிம்கள் பாதிக்கப்பட்டபோது நாங்களும் அவர்களுக்காக குரல்கொடுத்தோம்.

கல்முனை ஆதார வைத்தியசாலையைத் தேசிய வைத்திய சாலையாக தரமுயர்த்தக் கோரி இரண்டரைதசாப்தங்களாகபோராடி வருகிறோம். இதை அரசு விசேட கவனம் எடுத்து அமுல்படுத்த முன்வரவேண்டும் என்பதுடன் வடக்கின் ஒட்டுசுட்டான், கண்டாவெளி ஆகிய பிரதேசங்களுக்கு புதிய உள்ளூராட்சி சபையை உருவாக்க வேண்டும். மேலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு புதிய ஆளுநரை நியமிக்குமாறு இந்த அரசாங்கத்தை நிறுவ எங்களின் தொழிற் சங்கம் கடுமையாக கஷ்டப்பட்டுழைத்தோம் என்ற ரீதியில் இந்த மேதின கோரிக்கையாக நாங்கள் முன்வைக்கும் இந்த கோரிக்கைகளை அரசு கவனத்தில் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இணைய வழி வகுப்புக்கள்
(Online Classes)
தரம் 10, 11 (O/L) மாணவர்களுக்கான
வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும்
ஆங்கில, தமிழ் மொழி மூலமான வகுப்புக்கள்.
Zoom செயலி ஊடாக
இணைந்து கொள்ள அழையுங்கள்!
077 304 1905

இறைச்சிக் கோழி விற்பனை
புறோய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
U.S.A பாம்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# இறுதிப் பந்து வரை பரபரப்பான போட்டி சென்னையை வீழ்த்தியது மும்பை!

ஐ.பி.எல். 2021 தொடரின் 27 ஆவது போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணி 4 விக்கெட்டுக்களினால் சென்னை சூப்பர் கிங்ஸை வென்றது. நேற்று நடைபெற்ற இந்தப் போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மும்பை அணி களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்டுக் களமிறங்கிய சென்னை அணி 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 218 ஓட்டங்களைப் பெற்றது. பப் டு பிளெசிஸ் 50, மொயின் அலி 58 ஓட்டங்களையும், அம்பாத்தி ராயுடு 27 பந்துகளில் 72 ஓட்டங்களையும் எடுத்தனர்.

219 என்ற பெரிய வெற்றி இலக்கினை நோக்கித் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய மும்பை இந்தியன்ஸ் அணி 20 ஆவது ஓவரின் கடைசிப் பந்தில் வெற்றி இலக்கை அடைந்தது. குயின்டன் டி கொக் 38, ரோஹித் சர்மா 35, க்ருனல் பாண்ட்யா 32 ஓட்டங்களையும், கைரன் போலார்ட் ஆட்டமிழக்காது 34 பந்துகளில் 87 ஓட்டங்களையும் பெற்றனர்.

இறுதி ஓவரில் 16 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் இரண்டு 4 பவுண்டரிகளையும் ஒரு சிக்ஸரையும் அடித்த போலார்ட் மும்பை அணியை 4 விக்கெட்டுக்களால் வெற்றி பெற வைத்தார். போட்டியின் ஆட்ட நாயகனாகவும் அவர் தெரிவானார். சென்னை அணியின் சாம் கரன் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தார்.

## ரி20 உலகக்கிண்ணத் தொடர் திட்டமிட்டபடி நடக்கும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை நம்பிக்கை




இந்தியாவில் அதிகரித்து வரும் கொரோனாப் பரவல், இந்த ஆண்டு இறுதியில் நடக்கவுள்ள ரி20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரைப் பாதிக்கலாம் என்ற எண்ணம் எழுந்துள்ளது.

'இது குறித்து இப்போதே கேள்வி எழுப்புவது சரியல்ல. போட்டிக்கு இன்னும் 6 மாதங்கள் இருக்கிறது. அதற்குள் என்ன மாற்றங்கள் வேண்டுமானாலும் நடக்கலாம்' என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

முன்னர் அறிவித்தபடி 9 நகரங்கள் என்பதற்குப் பதிலாக நான்கு அல்லது ஐந்து நகரங்களாகக் குறைத்து, அங்கே போட்டிகளை நடத்தத் திட்டமிட்டுள்ளதாகவும், இந்தியாவில் நடத்தப்பட இயலாத சூழல் ஏற்பட்டால் மாற்று ஏற்பாடாக ஐக்கிய அரபு அமீரகத்தை தேர்வு செய்திருப்பதாகவும் அவர் கூறியிருக்கிறார். எங்கு நடந்தாலும், இந்தியாதான் அந்தத் தொடரை நடத்தும் என்றும் பி.சி.சி.ஐயின் அந்த அதிகாரி உறுதியாகத் தெரிவித்திருக்கிறார்.

## போட்டியின் போது காயமடைந்த சுமோ மல்யுத்த வீரர் உயிரிழப்பு

ஜப்பானில் சுமோ மல்யுத்தப் போட்டியின் போது தலையில் காயமடைந்த வீரர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

டோக்கியோ நகரில் கடந்த மார்ச் 26 ஆம் திகதி சுமோ மல்யுத்தப் போட்டித் தொடரொன்று நடைபெற்றது. இதில் 28 வயதான மிட்சுமி அமானோ என்ற வீரரும் கலந்து கொண்டார். அப்போது எதிர்ப் போட்டியாளருக்கும் இவருக்கும் இடையே கடும் மோதல் நடைபெற்றதில் மிட்சுமி அமானோ தூக்கி வீசப்பட்டார். அதில் அவருக்குத் தலையில் காயம் ஏற்பட்டது. கடந்த ஒரு மாதமாக அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுவந்த நிலையில் அவர் உயிரிழந்துள்ளார் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

போட்டியின் போது மிட்சுமி அமானோ கீழே விழுந்து அசைவின்றிக் காணப்பட்ட காணொளி அப்போதே பலரால் பகிரப்பட்டிருந்தது. 'உடனடியாக அவருக்கு மருத்துவ உதவி ஏன் தரப்படவில்லை?' என்ற கேள்வியும் எழுப்பப்பட்டது.

சுமோ போட்டிகளில் வீழ்த்தப்பட்டவர் தானாகவே எழுந்திருக்க வேண்டும் என்ற பாரம்பரிய விதி பின்பற்றப்படுவதால் சில நிமிடங்கள் வரை அமானோ எழுவதற்காக காத்திருந்தோம் என போட்டி ஒழுங்கமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அமானோவின் மரணத்தையடுத்து சுமோ போட்டி விதிகளில் மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும் என்ற கோரிக்கைகள் பரவலாக எழுந்துள்ளன.

## ஐ.பி.எல். இன்றைய போட்டிகள்

ஐ.பி.எல்.2021 தொடரில் இன்று இரு போட்டிகள் நடைபெறுகின்றன.

பிற்பகல் 3.30க்கு ஆரம்பமான முதலாவது போட்டியில் ராஜஸ்தான் ரோயல்ஸ், சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிகள் ஒன்றையொன்று எதிர்கொள்கின்றன. இந்தப் போட்டி டெல்லியில் நடைபெறுகிறது.

அஹமதாபாத்தில் நடைபெறவுள்ள இன்றைய இரண்டாவது போட்டியில் பஞ்சாப் கிங்ஸ், டெல்லி கப்பிட்டல்ஸ் அணிகள் விளையாடுகின்றன. இந்தப் போட்டி இரவு 7.30க்கு ஆரம்பமாகும்.

## ஆசியப் போட்டிகளைத் தவிர்க்கும் இந்தியக் குத்துச்சண்டை அணி

டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்பதற்காக இந்தியக் குத்துச்சண்டை வீர வீராங்கனைகள் 9 பேர் ஏற்கனவே தகுதி பெற்றுவிட்டனர். இந்நிலையில் துபாயில் இம்மாதம் 21ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஆசிய அளவிலான குத்துச்சண்டைப் போட்டிகளில் இவர்கள் பங்கேற்பதற்கான வாய்ப்புகள் குறைவாகவே காணப்படுகின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா பரவல் தீவிரமாக உள்ள நிலையில் இந்தியர்கள் டுபாய்க்குச் சென்று இந்தப் போட்டிகளில் பங்கேற்க வேண்டுமானால், போட்டிக்கு முன்பு 15 நாள்கள் தனிமைப்படுத்த வேண்டி இருக்கும். அதனால் 15 நாள்கள் பயிற்சி எதுவும் பெற முடியாமல் இருக்கும் என்றும், வீரர்களின் பாதுகாப்பும் முக்கியம் எனவும் இந்திய குத்துச்சண்டை சங்கங்களின் கூட்டமைப்பு தெரிவித்திருக்கிறது.

எனவே, இந்தியாவில் கொரோனா பாதிப்பு குறைவடைந்ததும் வீர வீராங்கனைகளை நேரடியாக டோக்கியோவுக்கு அனுப்புவதே தமது திட்டமிடலில் உள்ளது என்றும் அந்தக் கூட்டமைப்பு சார்பில் பேசவல்ல அதிகாரியொருவர் ஊடகங்களுக்குத் தெரிவித்திருக்கிறார்.

## மட்ரிட் ஓபின் மகளிர் டென்னிஸ் அஷ்லெ பார்ட்டி முன்னேற்றம்



ஸ்பெயினில் மட்ரிட் ஓபின் மகளிர் டென்னிஸ் போட்டித் தொடர் நடைபெற்று வருகிறது. அதன் ஒற்றையர் பிரிவு 2 ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த உலகின் முதல் நிலை வீராங்கனையான அஷ் லெ பார்ட்டி, ஸ்லோவேனியா வீராங்கனை தமரா ஸிடன் செக்கை எதிர்கொண்டார்.

இந்தப் போட்டியில் அஷ்லெ, 6-4, 1-6, 6-3 என்ற செட்களில் வெற்றி பெற்று 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார். இந்த ஆட்டம் ஒரு மணித்தியாலம் 58 நிமிடங்கள் நடந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபத்தான நிலையில் இலங்கை உள்ளது பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எச்சரிக்கை



கொழும்பு, மே 02

கொவிட் முதலாம் மற்றும் இரண்டாம் அலைகளை விட தற்போது பரவும் மூன்றாம் அலை தொடர்பான ஆய்வக அறிக்கையைப் பெறுவதில் தாமதம் ஏற்படுகின்றது எனப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது கவலைக்குரிய விடயம் என பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

எனவே ஆய்வக அறிக்கைகளை விரைவில் பெற்றுக்கொடுக்க முறையான திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஆய்வுகூட அறிக்கைகளின் ஊடாகவும், நோயாளர்களின் தரவுகளின் ஊடாகவும் பதிவாகும் நிலைமையை விட நாட்டின் தற்போதைய நிலைமை மிகவும் அபாயம் மிக்கதும், ஆபத்து மிக்கதுமாக உள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இரண்டாம் அலையின் போது இருந்த ஆய்வுகூடத் தாமதம் தற்போதைய மூன்றாம் அலையின் போதும் உள்ளது. நேற்று 1,500 தொற்றாளர்களை விடவும் அதிகமான தொற்றாளர்கள் பதிவாகினர். தற்போதைய நிலையை கொண்டு எதிர்காலம் தொடர்பில் கூற முடியும். பொது மக்களின் நடமாட்டம் அதிகரித்தமையே தற்போதைய நிலைக்குக் காரணம். இதேபோல் தொடர்ந்தும் பொறுப்பற்று செயற்பட்டால் நிலைமை மோசமாக மாறும். சமூக இடைவெளியைத் தொடர்ந்தும் பேணாமல் செயற்பட்டால் நிலைமை மோசமடையும். ஆகவே தேவையற்ற விதத்தில் பொது இடங்களில் நடமாட வேண்டாம். இந்த நிலைமை தீவிரமடையக்கூடும். என்றார்.

## ஆனமடுவ வைத்தியசாலையில் புதிய கொவிட் சிகிச்சைப் பிரிவு

புத்தளம், மே 02

ஆனமடுவ ஆதார வைத்தியசாலையினுள் புதிய கொவிட் சிகிச்சைப் பிரிவொன்று நேற்று (சனிக்கிழமை) தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என புத்தளம் மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்தியர் தினுஷா பெர்னாண்டோ தெரிவித்தார்.

தற்போதைய நிலைமையைக் கருத்திற்கொண்டு புதிய கொவிட் சிகிச்சை பிரிவொன்றை ஆரம்பித்ததாக அவர் மேலும் தெரிவித்தார். அதன்படி, ஆனமடுவ வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள கொவிட் சிகிச்சைப் பிரிவில் நேற்று முதல் நோயாளர்கள் சேர்க்கப்பட்டு வருகின்றார்கள் மாவட்ட சுகாதார சேவை பணிப்பாளர் தெரிவித்தார்.

கொவிட் பிரிவிற்குத் தேவையான ஏற்பாடுகளை வைத்தியசாலை ஊழியர்கள் செய்து வருகின்றனர்.

## குண்டசாலை பொலிஸ் பயிற்சி நிலையத்தில் இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி

கண்டி,குண்டசாலையில் உள்ள பொலிஸ் பயிற்சி நிலையம் ஒன்றில் நேற்று (சனிக்கிழமை) இரண்டு பொலிஸார் கொவிட் தொற்றுக்குள்ளானமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து 37 பேர் தனிமைப் படுத்தப்பட்டுள்ளமையுடன், கடந்த வெள்ளிக்கிழமையும் மேலும் இருவர் கொவிட் தொற்றுக்குள்ளாகியுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த பயிற்சி நிலையத்தில் பொலிஸ் கடமைகள் இடை நிறுத்தப்பட்டு மீண்டும் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்டவர்களுக்கான பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதற்காக நாடெங்கிலும் இருந்து சுமார் 120 பொலிஸ் உத்தியோகத்தர்கள் பயிற்சிகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில் இந்தப் பயிற்சி நிலையத்தில் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு தொற்று கண்டுபிடிக்கப்பட்டமையைத் தொடர்ந்து குறித்த பயிற்சி நிலையம் மூடப்பட்டுள்ளதுடன், அங்கிருந்த பயிற்சியாளர்கள் குருநாகலுக்கு மாற்றப்பட்டுள்ளார்கள் எனவும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.

## பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் கடமைக்கு இடையூறு ஏற்படுத்திய ஹோட்டல் வவுனியாவில் தனிமைப்படுத்தல்

வவுனியாவில் பொதுச் சுகாதார பரிசோதகர்களின் கடமைக்கு இடையூறை ஏற்படுத்திய பிரபல ஹோட்டல் ஒன்று தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன், அங்கு கடமையாற்றிய ஐந்து பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என பிராந்திய சுகாதாரப் பணிமனையின் மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ரி.தியாகலிங்கம் தெரிவித்துள்ளார்.

நேற்று (சனிக்கிழமை) மதியம் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

கொவிட் - 19 தாக்கம் அதிகரித்து வரும் நிலையில் அதனைக் கட்டுப்படுத்துவதற்காகச் சுகாதாரப் பரிசோதகர்கள் கடந்த ஒருவாரமாகத் தீவிர கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

அந்த வகையில் கடந்த வியாழக்கிழமை வவுனியா நகரப்பகுதியில் உள்ள உணவகங்கள் சுகாதார பிரிவினரால் சோதனை செய்யப்பட்டதுடன், அங்கு பின்பற்றப்படுகின்ற சுகாதார நடைமுறைகள் மற்றும் முகக் கவசம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

இதன்போது சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றாத மற்றும் முகக்கவசம் அணியாது வர்த்தக நிலையங்களில் கடமையாற்றியோர் என 100 பேருக்கு எதிராக முறைப்பாடு பதிவு செய்யப்பட்டு, சுகாதார பணிமனைக்குக் குறித்த உணவகங்களைச் சேர்ந்தோர் அழைக்கப்பட்டு அவர்களுக்குச் சுகாதார அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன.

ஆனாலும் இந்தச் செயற்பாட்டுக்கு வவுனியா, ஹொரவப்பொத்தானை வீதியில் உள்ள பிரபல ஹோட்டல் ஒன்று ஒத்துழைப்பு வழங்கவில்லை.

இந்நிலையில் நேற்று (சனிக்கிழமை) பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் பொலிஸார் அடங்கிய குழுவினர் இந்தக் ஹோட்டலுக்குச் சென்று அவர்களது சுகாதார நடைமுறைகள் முகக் கவசம் என்பன தொடர்பில் பரிசீலித்ததுடன், சுகாதாரப் பணிமனைக்கு வராமைக்குரிய காரணம் தொடர்பிலும் விளக்கம் கோரப்பட்டது.

இதன்போது குறித்த ஹோட்டலில் கடமையாற்றிய சிலர் அன்டிஜன் அல்லது பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ளாது கடமையாற்றியமை தெரியவந்ததுடன், அவர்களை பி.சி. ஆர். பரிசோதனை மேற்கொண்ட பின்னர் குறித்த ஹோட்டலைத் திறக்குமாறு கோரினோம்.

இதன்போது சுகாதாரப் பரிசோதகர்களின் கடமைக்கு ஒத்துழைக்காதமல் அவர்கள் குழப்பம் விளைவித்து சோடாப் போத்தல் ஒன்றால் சுகாதாரப் பரிசோதகர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ள முயற்சி எடுக்கப்பட்டது.

இதனையடுத்து உடனடியாகப் பொலிஸார் தலையிட்டு, மேலதிக பொலிஸாரை வரவழைத்துக் குறித்த ஹோட்டலை சுய தனிமைப்படுத்தியதுடன், அரச அதிகாரிகளின் கடமைக்கு இடையூறை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் 5 பேரை வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று அவர்களுக்கு எதிராக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

## வாள்வெட்டுச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணத்தில் ஒருவர் கைது

வவுனியா, மே 02

வவுனியா - யாழ்.வீதியில் பயணித்த டிப்பரை வழி மறித்து அதன் சாரதி மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தி விட்டு மோட்டார் சைக்கிளில் தப்பிச்சென்ற சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வவுனியா, திருநாவற்குளம் பகுதியில் இருந்து ஏ - 9 வீதி வழியாக யாழ். நகரை நோக்கிச் சென்ற டிப்பர் வாகனத்தை கடந்த வெள்ளிக்கிழமை பின் தொடர்ந்து மோட்டார் சைக்கிளொன்றில் வந்த நபர்கள் யாழ்.வீதி சோயா லேன் பகுதியில் பயணித்த டிப்பரை வழிமறித்து அதன் சாரதி மீது வாள் வெட்டுத் தாக்குதல் மேற்கொண்டு தப்பி சென்றுள்ளனர்.

குறித்த வாள்வெட்டுத் தாக்குதலில் டிப்பர் சாரதி படுகாயமடைந்த நிலையில், வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த வவுனியா பொலிஸார், மோட்டார் சைக்கிளில் வந்து தாக்குதல் மேற்கொண்டவர் என்ற சந்தேகத்தின் பேரில் அப்பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரைக் கைது செய்துள்ளமையுடன், அவரிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.05.2021இல் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org